1973 நவம்பர் 23]

Production of Jasmine oil.

* 344 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a factory to produce Jasmine oil in the Public and the Private Sectors; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: அதற்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அதற்கு ஒரு ஆலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிற்சாலை ஒன்று அமைக்கலாமா என்ற யோசனை பரிசிலிக்கப்பட்டது. ஆனால் அது நல்ல முறையில் நடக்குமா என்று சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

Commutation of sentences.

* 345 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be please to state—

(a) whether remission was granted to any of the prisoners undergoing life imprisonment during this year (1972–73); and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) 1972-73-ஆம் ஆண்டு, 20 நபர்களுடைய ஆயுள் தண்டனையை குறிப்பிட்ட வருட கடுங்காவல் தண்டனையாக அரசு மாற்றி உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்னும் மதுரை, திருச்சி, கோவை போன்ற சிறைகளில் 10 ஆண்டுகளுக்கு அதிகமாகச் சிறை தண்டனை அனுபவிக்கிறவர்கள் 'லைஃப் இம்ப்ரிஸன்மெண்டு பிரிஸனர்ஸ்' இருக்கிறார்களா? அவர்களுடைய விவரங்கள் தெரியுமா?